பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 07 2024 **FRIDAY** **7.15 PM**

<u>முதலைப்புச் செய்திகள்</u>

1. உலக பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் அஸ்ஸாமின் **Charaideo Moidam** நினைவிடம் சேர்க்கப்பட்டிருப்பதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

2. இந்தியா – ஆசியான் நாடுகளிடையே பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த உயர் முன்னுரிமை அளிக்கப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. மருத்துவ சிகிச்சைக்காக இந்தியாவுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மகாராஷ்ட்ரா, குஜராத் மாநிலங்களில் மீட்பு நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5. பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று தொடங்குகின்றன.

--- இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>

யுனெஸ்கோ உலக பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் அஸ்ஸாம் மாநிலத்தின் **Charaideo Moidam** சேர்க்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அவர் தமது சமூக வலைதள பதிவில், நம் முன்னோர்களின் மதிப்பு மிக்க நினைவிடமாக பராமரிக்கப்படும் **Ahom** கலாச்சாரத்திற்கு கிடைத்திருக்கும் மரியாதை பெருமை அளிக்கக்கூடியது என்று குறிப்பிட்டுள்ளார்.

**Ahom** மற்றும் அதுகுறித்த கலாச்சாரம் பற்றி ஏராளமான மக்கள் அறிந்துகொள்ள இந்த பெருமை வழிவகுக்கும் என்று தாம் நம்புவதாகவும் திரு நரேந்திர மோடி அதில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

நாட்டிற்கு எதிராக தீவிரவாத செயல்களில் ஈடுபடுவோருக்கு நமது படை வீரர்கள் உரிய பதிலடி கொடுப்பார்கள் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கார்கில் போர் வெற்றி தினத்தையொட்டி, லடாக்கின் **Drass**-ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

நாட்டின் பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி ஒன்றரை லட்சம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பு தளவாடங்களை பொறுத்தவரை இறக்குமதி என்ற நிலையில் இருந்து, ஏற்றுமதி செய்யும் அளவிற்கு நமது திறன் உயர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அக்னிபத் திட்டத்தை பற்றி எதிர்க்கட்சிகள் தவறான தகவல்களை பரப்புவதாகவும் திரு நரேந்திர மோடி குறை கூறினார்.

இந்நாளையொட்டி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கார்கில் போரில் நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த பாதுகாப்புப்படை வீரர்களுக்கு புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

<<<<<<>>>>>

இந்தியா – ஆசியான் நாடுகளிடையே பாதுகாப்பு, சுகாதாரம், கலாச்சார பாரம்பரியம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த முன்னுரிமை அளிக்கப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

லாவோஸ் தலைநகர் **Vientiane**–வில் ஆசியான் -இந்தியா வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர், ஆசியான் உடனான அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கு இந்தியா உயர் முன்னுரிமை அளித்து வருவதாக தெரிவித்தார்.

இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கை மற்றும் இந்தோ – பசிபிக் தொலைநோக்கு பார்வைக்கு ஆசியான் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், மியான்மரில் தற்போது நிலவும் சூழ்நிலை, காஸாவில் நடைபெற்றுவரும் போர் ஆகியவை குறித்தும் திரு ஜெய்சங்கர் தமது உரையில் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தால் அனுமதி வழங்கப்பட்டு, நாடு முழுவதும் 393 தனியார் செய்தி தொலைக்காட்சி சேனல்கள் செயல்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில இதனை தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், செயற்கைக்கோள் மூலம் செய்தி அலைவரிசைகளுக்கான அரசின் கொள்கை விதிமுறைகளை பின்பற்றி, அவை செயல்படுவதாக குறிப்பிட்டார்.

தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் 18-ஆவது விதியின்கீழ், 3 ஆயிரத்து 700 டிஜிட்டல் செய்தி பதிப்பாளர்கள் தங்களின் விவரங்களை அரசிடம் தெரிவித்திருப்பதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<>>>>>

மருத்துவ சிகிச்சைக்காக இந்தியாவுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் இன்று இதனை தெரிவித்த மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜெந்திர சிங் ஷெகாவத், கடந்த 2020-ஆம் ஆண்டு 183 பேர் மருத்துவ சிகிச்சைக்காக வந்த நிலையில், கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 635-ஆக அதிகரித்துள்ளது என்று கூறினார்.

மருத்துவ தேவைக்காக வெளிநாடுகளிலிருந்து வருவோரின் வசதிக்காக மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை, தனி இணையதளத்தை தொடங்கியிருப்பதாகவும், அதில் பதிவு செய்து நாடுமுழுவதும் உள்ள மருத்துவ வசதிகளை அறிந்துகொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

மின்னணு முறையில் ஆவணங்களை பெறக்கூடிய டிஜி லாக்கர் வசதியை நாடு முழுவதும் 30 கோடி பேர் பயன்படுத்தி வருவதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு **Jitin Prasada** தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், அரசு துறைகளின் 675 கோடி மின்னணு முறையிலான ஆவணங்களை பயனாளிகள் பெற்றிருப்பதாக கூறினார்.

ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களை சேமித்து வைப்பதற்கும், அவற்றை சரிபார்ப்பதற்கும் ஏற்ற தளமாக டிஜி லாக்கர் செயல்படுவதாகவும் திரு **Jitin Prasad** தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மழை வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மகாராஷ்ட்ரா, குஜராத் மாநிலங்களில் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மகாராஷ்ட்ரா மாநிலம் புனேயில் வெள்ளம் தொடர்பான ஆய்வு கூட்டத்தில் பேசிய மத்திய இணையமைச்சர் திரு முரளிதர் மஹோல், இம்மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்கள் பற்றிய ஆய்வுக்கு பின்னர் இழப்பீடு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

வெள்ள பாதிப்புகள் குறித்து கணக்கெடுப்பதற்காக மாநில அரசின் சார்பில் எட்டுக்குழுக்கள் அமைக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

**Khadakwasla** அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுவதற்குமுன், மாநில அரசு அதிகாரிகள் ஒருங்கிணைந்து, கரையோர மக்களுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு முரளிதர் மஹோல் அறிவுறுத்தினார்.

இதற்கிடையே, குஜராத் மாநிலத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் தண்ணீர் வடிய தொடங்கியிருப்பதால் மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

என்றாலும் வதோதரா, சூரத் மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியிருப்பதால் அங்கு மீட்புப்பணிகளில் தேசிய பேரிடர் மீட்புப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், கர்நாடக அணைகளிலிருந்து காவிரி ஆற்றில் தமிழக எல்லைக்கு வரும் உபரி நீர் அதிகரித்திருப்பதன் காரணமாக சேலம் மாவட்டம் மேட்டூர் அணை வேகமாக நிரம்பி வருகிறது

முழு கொள்ளளவான 120 அடியை மேட்டூர் அணை ஒருவாரத்தில் எட்டக்கூடும் என்பதால் சேலம், ஈரோடு, நாமக்கல் உள்ளிட்ட ஒன்பது மாவட்டங்களில் வெள்ள பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய நீர்வளத்துறை அறிவுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>

ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் புற்றுநோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்கழகம் தெரிவித்துள்ளது.

மக்களவையில் இதனை தெரிவித்துள்ள மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ், கடந்த 2022-ஆம் ஆண்டு 14 லட்சத்து 61 ஆயிரத்து 427 பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த ஆண்டில் இது 15 லட்சத்து 33 ஆயிரத்தை தாண்டியிருப்பதாக ஐ சி எம் ஆர் புற்றுநோய் ஆராய்ச்சி மைய தகவல் தெரிவிப்பதாக கூறினார்.

புற்றுநோய்க்கு குறைந்த கட்டணத்தில் பரிசோதனை மற்றும் சிகிச்சை வழங்க அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

சட்ட விரோத கனிம சுரங்கம் தொடர்பான வழக்கில் தமிழக அமைச்சர் திரு பொன்முடியின் 14 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பிலான சொத்துக்களை அமலாக்கத்துறை முடக்கியுள்ளது.

திரு பொன்முடி மற்றும் அவரது குடும்பத்தினருக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் முடக்கப்பட்டிருப்பதாக சென்னையில் உள்ள அமலாக்கத்துறை இயக்குனரகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

வரும் 29-ஆம் தேதி தொடங்கும் சிறப்பு லோக் அதாலத்தில் மக்கள் அதிக அளவில் பங்கேற்று பயனடைய வேண்டும் என்று உச்சநீதிமன்ற நீதிபதி திரு **'B R Gavai'** கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் எமது செய்தியாளரிடம் பேசிய அவர், லோக் அதாலத் மூலம் வழக்குகளுக்கு சுமூகமான தீர்வுகாண்பது வெற்றிகரமாக கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

விரைவான மற்றும் குறைந்த செலவில் மக்களுக்கு நீதி வழங்குவதில் லோக் அதாலத் நீதிமன்றங்கள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு **'Gavai** கூறினார்.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று தொடங்குகின்றன.

இந்திய நேரப்படி இரவு 11 மணியளவில் தொடங்கும் இந்த நிகழ்ச்சி அதிகாலை மூன்று மணிவரை நடைபெறவுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கப்பட்டதன் நூற்றாண்டை குறிக்கும் வகையில், முதல் முறையாக தொடக்க விழா மைதானத்திற்கு பதிலாக, **Seine** ஆற்றையொட்டி நடைபெறுகிறது.

இந்தியா உட்பட பல்வேறு நாடுகளின் வீரர்கள் பங்கேற்கும் அணிவகுப்பு இந்த ஆற்றில் நடைபெறுகிறது.

இதற்காக 100 படகுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியா சார்பில் இந்த அணிவகுப்பில் சரத் கமல் மற்றும் பி வி சிந்து தேசிய கொடியை ஏந்தி செல்கின்றனர்.

நம் நாட்டின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில், உடைகளை அணிந்து இந்திய வீரர்கள் இந்த அணிவகுப்பில் பங்கேற்கின்றனர்.

அணிவகுப்பு முடிந்தபின் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகள் மூன்று மணிநேரத்திற்கும் மேலாக நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

------------------

ஆசிய கோப்பை மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இலங்கையின் தம்புலாவில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்றது.

இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த பங்களாதேஷ் தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத்தொடங்கி 8 விக்கெட் இழப்பிற்கு 80 ரன் மட்டுமே எடுத்தது.

அதிகபட்சமாக **Nigar Sultana** 32 ரன் எடுத்தார்.

ரேணுகா சிங் மற்றும் ராதா யாதவ் அபாரமாக பந்துவீசி தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் களமிறங்கிய இந்தியா 11 ஓவரிலேயே விக்கெட் இழப்பின்றி 83 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

ஷஃபாலி வர்மா 26 ரன்னுடனும், ஸ்மிருதி மந்தனா 55 ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

------------------

அஸ்தானாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் நிதின்குமார் சின்ஹா – **Prajwal** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 7-6 என்ற செட் கணக்கில், கஜகஸ்தானின் **Amir Omarkhanov – Vitaliy Zatsepin** இணையை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Prajwal** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<END>>>>>